


## ✠ திருத்தூதர் புனித பெலவேந்திரர்/அந்திரேயா ✠

*(St. Andrew)*

திருத்தூதர்/ முதல் அழைப்பு பெற்றவர்/

கிறிஸ்துவை அறிமுகம் செய்பவர் :( *Apostle* )

**பிறப்பு :** கி. பி. முதலாம் நூற்றாண்டின் முற்பகுதி

பெத்சாய்தா, கலிலேயா, ரோம பேரரசு

*(Bethsaida, Galilee, Roman Empire)*

**இறப்பு :** கி. பி. முதலாம் நூற்றாண்டின் பிற்பகுதி

பத்ராஸ், அச்சையா, ரோம பேரரசு

*(Patras, Achaia, Roman Empire)*

***ஏற்கும் சபை/ சமயம் :*** **எல்லா கிறிஸ்தவப் பிரிவுகளும்**

***சித்தரிக்கப்படும் வகை :*** ***'X' வடிவ சிலுவை, ஏட்டுச்சுருள்***

***பாதுகாவல் :***

*ஸ்காட்லாந்து, உக்ரைன், ரஷியா, சிசிலி, கிரேக்க நாடு, பிலிப்பைன்ஸ், ருமேனியா, மீனவர், கடற்படையினர், தரைப்படையினர், பாடகர், கர்ப்பிணிப் பெண்கள், இறைச்சி வெட்டுபவர்கள், கயிறு நெய்யும் தொழிலாளி,*

*புனித அந்திரேயா அல்லது புனித பெலவேந்திரர் முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர், இயேசுவின் பன்னிரு திருத்தூதர்களுள் (அப்போஸ்தலர்களுள்) ஒருவர்.*

*இவர் புனித பேதுருவின் மூத்த சகோதரர். கலிலேயாவின் பெத்சாயிதா நகரில் பிறந்தவர், மீன் பிடித்து வந்தார். திருமுழுக்கு யோவானிடம் சீடராயிருந்தார். பின்னர் இயேசுவோடு சேர்ந்தார். இயேசு திருமுழுக்கு பெற்ற மறுநாள் அந்தப் பக்கமாய் செல்வதைக் கண்ட திருமுழுக்கு யோவான், அவரைச் சுட்டிக்காட்டி, "இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி!" என்றார் . உடனே இவர் இயேசுவை பின் தொடர்ந்தார். இயேசுவின் அழைப்புக்கிணங்கி ஓர் இரவும் பகலும் அவரோடு தங்கினார். (யோவான் 1:29-39).*

*அடுத்த நாள் தன் சகோதரன் பேதுருவையும் அழைத்து வந்தார். கானாவூர் திருமணத்திற்கு இயேசுவோடு வந்திருந்தார். இயேசு அப்பங்களை பருகச் செய்த போது, ஒரு சிறுவனிடம் ஐந்து அப்பமும், இரண்டு மீன்களும் உள்ளதென்று சொன்னவர் இவரே. கோவிலின் அழிவை முன்னறிவித்தபோது **'அழிவு எப்போது வரும்?'** என கேட்டவர் இவரே.*

*தூய ஆவியின் வருகைக்குப் பிறகு கப்பதோசியா, கலாசியா, மாசிதோனியா, பைசண்டைன் பேரரசு மற்றும் பல இடங்களில் மறை பணி புரிந்தார்.*

*பத்ராஸில் 'X' வடிவ சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்பட்டார். அச்சிலுவையைக் கண்டதும்,* ***"உன்னில் தொங்கி என்னை மீட்டவர், உன் வழியாய் என்னை ஏற்றுக் கொள்வாராக"*** *என்றார். பத்ராசில் (Patras) உள்ள புனித அந்திரேயா ஆலயத்தில் இவரது புனித பண்டம் வைக்கப்பட்டுள்ளது.*

***செபம்:***

***மாட்சிமிக்க ஆண்டவராகிய கடவுளே! உமது திருத்தூதரான புனித அந்திரேயாவை நற்செய்தியை போதிக்கவும் உமது திருச்சபையை வழிநடத்தவும் அழைத்தீர். அவர் எங்களுக்காக எப்பொழுதும் பரிந்து பேசுபவராக திகழ நாங்கள் உம்மை தாழ்மையாய் வேண்டுகின்றோம்.***